அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு

# 2024

# தமிழ்

## ஆண்டு 7

நேரம்: 150 மணித்துளிகள்

நாள்: 01.06.2024

**மொத்தப்புள்ளிகள்: 100**
(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)

**பக்கங்கள்**
20

சுட்டெண்: | | | | | | | | | | |

# பகுதி 1 - எழுதுதல்

## 1 மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.

1. கூத்துகளைப் பயிற்றுவித்து மேடையேற்றுபவர்
   1. கவிஞர்
   2. அண்ணாவியார்
   3. கூத்தர்
   4. பாணர்

2. தோற்றம் என்பதன் எதிர்ப்பொருட் சொல்
   1. நிறைவு
   2. சேய்மை
   3. மறைவு
   4. தெளிவு

3. தங்கை கலகலவெனச் சிரித்தாள். இதில் கலகல என்பது
   1. இரட்டைக்கிளவி
   2. இணைமொழி
   3. அடுக்குத்தொடர்
   4. அடுக்கிடுக்குத்தொடர்

4. வன்னி நிலப்பரப்புக்குள் அடங்கும் மாவட்டங்களின் எண்ணிக்கை
   1. மூன்று
   2. இரண்டு
   3. ஆறு
   4. நான்கு

5. பூவரும்பு என்பதைப் பிரித்தெழுதினால்
   1. பூ + அரும்பு
   2. பூ + வரும்பு
   3. பூம் + அரும்பு
   4. பூவு + அரும்பு

6. உலகம், வையகம், பார் போன்ற பொருள் தரும் ஒரு சொல்
   1. ஒளி
   2. குளம்
   3. புவி
   4. இனம்

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|

7. ‘அரிது அரிது மானிடராதல் அரிது’ என மாந்தப் பிறப்பின் சிறப்பைக் கூறியவர்
   1. அன்னை திரேசா
   2. ஔவையார்
   3. விபுலாநந்த அடிகள்
   4. திருவள்ளுவர்

8. மாலைக் காட்சி மனத்துக்கு இன்பம் தரும். என்பது
   1. சொற்றொடர்
   2. சொல்
   3. சொல்லியம்
   4. வினாச்சொல்

9. சேந்தன் பள்ளியிலிருந்து ஓட்டமும் நடையுமாக வீட்டுக்குச் சென்றான். ஓட்டமும் நடையுமாக என்பது
   1. அடுக்குத்தொடர்
   2. இரட்டைக்கிளவி
   3. அடுக்கிடுக்குத்தொடர்
   4. இணைமொழி

10. ‘தமிழர் பண்பாட்டுக் கழகம்’ என்ற அமைப்பைத் தோற்றுவித்தவர்
    1. தனிநாயகம் அடிகளார்
    2. மகாகவி து. உருத்திரமூர்த்தி
    3. விபுலாநந்த அடிகள்
    4. பாரதிதாசன்

11. படிக்கிறாள் என்ற நிகழ்கால வினைமுற்றை எதிர்காலமாக்கினால்
    1. படித்தாள்
    2. படிப்பித்தாள்
    3. படிப்பாள்
    4. படிப்போம்

12. குயில் கூவும். அது போலக் குருவி
    1. கரையும்
    2. அகவும்
    3. கீச்சிடும்
    4. அலறும்

13. கடலும் கடல் சார்ந்த நிலமும்
    1. முல்லை
    2. நெய்தல்
    3. குறிஞ்சி
    4. மருதம்

14. வெறுமை + இலை என்பதைச் சேர்த்தெழுதினால்
    1. வெற்றிலை
    2. வெறுமையிலை
    3. வெற்றியிலை
    4. வெற்றுலை

15. ஈகை என்பதன் ஒத்தபொருட் சொல்
    1. தொண்டு
    2. கொடை
    3. துன்பம்
    4. மகிழ்ச்சி

16. தொழில்நுட்ப வளர்ச்சியின் அதியுயர் கண்டுபிடிப்பு
    1. கணினி
    2. தொலைபேசி
    3. தொலைக்காட்சி
    4. இணையம்

17. ஆசிரியர் குமரனைப் பாராட்டினார். இதில் வந்துள்ள வேற்றுமை உருபு
    1. ஆர்
    2. அர்
    3. இன்
    4. ஐ

18. ஈழத்தில் அரச ஆட்சிமுறையின் உருவாக்கத்திற்கான காலம் எனக் கூறப்படுவது
    1. நுண்கற்காலம்
    2. பெருங்கற்காலம்
    3. ஐரோப்பியர் காலம்
    4. சங்ககாலம்

19. மொழிக்கு முதலிலும் இறுதியிலும் வரும் வினாவெழுத்து
    1. ஆ
    2. யா
    3. ஓ
    4. ஏ

20. 'யாழ்ப்பாண வைபவ கௌமுதி' என்ற நூலை எழுதியவர்
    1. சோமசுந்தரப் புலவர்
    2. பாரதிதாசன்
    3. கல்லடி வேலுப்பிள்ளை
    4. புதுவை இரத்தினதுரை

21. ஆகா! இயற்கை என்ன அழகு! இச்சொல்லியம்
1. கூற்றுச்சொல்லியம்
2. மெய்ப்பாட்டுச்சொல்லியம்
3. வினாச்சொல்லியம்
4. விருப்புச்சொல்லியம்

22. நீர் நிலைகளில் பூக்கும் பூக்கள்
1. தாமரை, முல்லை
2. மல்லிகை, காந்தள்
3. முல்லை, அல்லி
4. தாமரை, அல்லி

23. பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்திக் காட்டுவது
1. வினைச்சொல்
2. வேற்றுமை
3. அடைமொழி
4. பெயர்ச்சொல்

24. அரசி பாடலை இனிமையாகப் பாடினாள். இதில் வந்துள்ள அடைமொழி
1. பாடினாள்
2. அரசி
3. பாடலை
4. இனிமையாக

25. சங்க இலக்கியப் பாடல்களின் கருப்பொருளாக அமைந்தவை
1. காதல், பக்தி
2. வீரம், பக்தி
3. காதல், வீரம்
4. பக்தி, அறம்

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|

25 X 1 = 25 புள்ளிகள்

## 2 தரப்பட்டுள்ள சொற்கள் பெயராகவும் வினையாகவும் அமையச் சொல்லியம் எழுதுக.

1. மடி

பெயர்: ______________________________

வினை: ______________________________

2. அலை

பெயர்: ______________________________

வினை: ______________________________

4 X 1½ = 6 புள்ளிகள்

## 3 தரப்பட்டுள்ள வினையடிகளின் பெயரெச்சம், வினையெச்சம், வினைமுற்று என்பவற்றை எழுதுக.

| | பெயரெச்சம் | வினையெச்சம் | வினைமுற்று |
|---|---|---|---|
| பற | | | |
| பார் | | | |
| சிரி | | | |

9 X 1 = 9 புள்ளிகள்

## 4 தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

1. தமிழருடைய சிறப்பான பழக்கவழக்கங்கள் இரண்டு எழுதுக.

2. வன்னி பழந்தமிழரது நிலமாக விளங்கியமைக்குச் சான்றுகள் இரண்டு எழுதுக.

3. அறிவியல் வளர்ச்சியின் விரைவுப் போக்கை எதனூடாக அறிந்து கொள்ளலாம்?

4. ஈழத்தில் கூத்துகள் ஆடப்படும் இடங்கள் இரண்டு எழுதுக.

5. உடன்பாட்டுவினைச் சொல்லியத்தை எதிர்மறைவினைச் சொல்லியமாக மாற்றி எழுதுக.
   தமிழினி பள்ளிக்குச் சென்றாள்.

6. ஆறாம் வேற்றுமை உருபு ஏற்ற சொல்லியம் ஒன்று எழுதுக.

7. விருப்புச் சொல்லிய வகைகள் எவை?

5 X 2 = 10 புள்ளிகள்

## 5 பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

வண்ணக் கிளியே, வீடெங்கே?
மரத்துப் பொந்தே என் வீடு.
தூக்கணாங்குருவி, வீடெங்கே?
தொங்குது மரத்தில் என் வீடு.
கறுப்புக் காகமே, வீடெங்கே?
கட்டுவேன் மரத்தில் என் வீடு.
பொல்லாப் பாம்பே, வீடெங்கே?
புற்றும் புதரும் என் வீடு.
- அழ. வள்ளியப்பா

1. காகம் எங்கே வீடு கட்டுகிறது?

2. கிளியின் வீடு எது?

3. புற்றும் புதரும் எதனுடைய வீடு?

4. மரத்தில் தொங்குகின்ற கூட்டைக் கட்டும் பறவை எது?

5. இப்பாடலில் கூறப்படும் பறவைகள் எத்தனை?

5 X 2 = 10 புள்ளிகள்

## 6 தரப்பட்டுள்ள சொல்லியங்களை உங்கள் வாழிடமொழியில் வாசித்து, தமிழில் மாற்றி எழுதுக.

**ஆங்கிலம்:**

1. Snow falls during winter.
2. We respect the elders.
3. The boy waters the plant.
4. The teacher taught Tamil language to the students.
5. The anniversary will be held at our school tomorrow.

**யேர்னி:**

1. In der Winterzeit fällt Schnee.
2. Wir respektieren die Ältere.
3. Dòer Junge gießt Wasser auf die Pflanze
4. Der Lehrer unterrichtete den Schülern die tamilische Sprache.
5. Morgen findet an unserer Schule die Jubiläumsfeier statt.

**நோர்வே:**

1. Det snør om vinteren.
2. Vi skal respektere de eldre.
3. Gutten heller vann på planten.
4. Læreren underviser tamil til elevene.
5. I morgen er det jubileumsdag på skolen.

**இத்தாலி:**

1. In inverno nevica.
2. Noi rispettiamo i grandi.
3. Il ragazzo sta annaffiando la pianta.
4. Il professore ha insegnato agli studenti la lingua Tamil.
5. Domani nella nostra scuola si svolgerà l'evento annuale.

**நெதர்லாந்து:**

1. In de winter is het mistig.
2. Wij respecteren ouderen.
3. Een jongen geeft de planten water.
4. Een leraar leerde de leerlingen de Tamilse taal.
5. Morgen vindt op onze school het jaarfeest plaats.

**டென்மார்க்:**

1. Der falder sne om vinteren.
2. Vi må respekterer ældre.
3. Drengen vander planten.
4. Læreren underviste eleverne i tamilsk sprog.
5. I morgen er der jubilæum for vores skole.

**சுவீடன்:**

1. Det snöar på vintern.
2. Vi respekterar äldre.
3. Pojken vattnar plantan.
4. Läraren lärde eleverna det tamilska språket.
5. Imorgon sker årsfesten på vår skola.

**பின்லாந்து:**

1. Lunta sataa talvella.
2. Me kunnioitamme vanhuksia.
3. Poika kastelee kasvia.
4. Opettaja opetti oppilaille tamilin kieltä.
5. Vuosipäivää vietetään meidän koulussa huomenna.

**தமிழ்**

1. ______________________________
______________________________
2. ______________________________
______________________________
3. ______________________________
______________________________
4. ______________________________
______________________________
5. ______________________________
______________________________

5 X 2 = 10 புள்ளிகள்

## 7 தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1. தமிழிலக்கிய வரலாற்றில் சங்ககாலம்
2. பல்லினப் பண்பாடு
3. நான் விரும்பும் நூல்

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**
   - விரும்பும் நூலின் பெயர், எழுதியவர்
   - விரும்பும் காரணம், சிறப்புகள்
   - பெற்ற பயன்கள்
4. மழைக்காட்சி

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**
   - காலநிலை
   - பார்த்த காட்சிகள்
   - மனத்தில் நிலைத்து நிற்பதன் காரணம்

15 புள்ளிகள்

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

### 1 பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.

அன்பு என்பது மாந்தரிடம் இருக்க வேண்டிய நற்பண்புகளுள் முதன்மையானது. அது எமது வாழ்வை மகிழ்வாகவும் நிறைவாகவும் வைத்திருக்கும். நாம் அனைத்து உயிர்களிடமும் அன்பாக இருக்க வேண்டும். இதையே உலகிலுள்ள எல்லா இறைநெறிகளும் கூறுகின்றன. இன்று உலகில் போர்கள் நடந்து கொண்டு இருக்கின்றன. இதற்கு முதன்மைக் காரணம் மாந்தநேயம் இல்லாமல் போனதே! உயிர்களிடத்தில் அன்பு செலுத்துவது போல் இயற்கை மீதும் நாம் அன்பு செலுத்த வேண்டும். இயற்கை மாந்தனுக்கு வாழ்க்கையைக் கற்றுக் கொடுக்கிறது. இயற்கை இல்லை என்றால் மண்ணில் ஈரமில்லை; விளைச்சல் இல்லை; மாந்த வாழ்க்கையும் இல்லை. எனவே, இயற்கையைப் பாதுகாக்கவும் வளப்படுத்தவும் எம்மாலான முயற்சிகளை மேற்கொள்வோம். இயற்கையிடமும் உயிர்களிடமும் அன்பு செலுத்தி, ஓர் அமைதியான உலகை உருவாக்குவோம்!

1. மாந்தரிடம் இருக்கவேண்டிய நற்பண்புகளுள் முதன்மையானது எது?

______________________________

2. உலகில் போர்கள் நடந்து கொண்டிருப்பதற்கான முதன்மைக் காரணம் என்ன?

______________________________

3. இயற்கை இல்லை என்றால் நடக்கக் கூடிய விளைவுகளுள் ஒன்று எழுதுக.

______________________________

4. நாம் எவ்வாறு அமைதியான ஓர் உலகை உருவாக்கலாம்?

______________________________

5. இயற்கை மாந்தனுக்கு எதனைக் கற்றுக்கொடுக்கிறது?

______________________________

5 X 2 = 10 புள்ளிகள்

## 2 அறிவித்தலை வாசித்து, தரப்பட்ட கூற்றுகள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் ✗ எனவும் அடையாளம் இடுக.

### பாரதி நுண்கலைப் பள்ளியின்

# பொன்விழா - 2024





அன்புடையீர் !

பாரதி நுண்கலைப்பள்ளியின் மாணவர்கள் வழங்கவிருக்கும் பல்வேறுபட்ட கலை, கலாசார நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்து, அவர்களை ஊக்குவித்துச் சிறப்பிக்குமாறு அன்போடு அழைக்கின்றோம்.

**நிகழ்வுகள்:**

- மங்கல விளக்கேற்றல்
- அகவணக்கம்
- வரவேற்புரை
- நாட்டுப்புற இசை
- வரவேற்பு நடனம்
- கரகம், கும்மி, கோலாட்டம், காவடி
- கலைஞர்கள் மதிப்பளிப்பு
- நன்றியுரை

இடம்: கலை அரங்கம், பாரதி நுண்கலைப்பள்ளி

காலம்: 04.08.2024 ஞாயிற்றுக்கிழமை 10:00 மணி

**தொடர்புகளுக்கு: 470 64 98 320**

**ஒழுங்கமைப்பு: பாரதி நுண்கலைப்பள்ளி**



1. பாரதி நுண்கலைப்பள்ளியில் பொன்விழா நடைபெறவுள்ளது. ( )
2. இவ்விழாவில் வரவேற்பு நடனம் இடம்பெறும். ( )
3. சனிக்கிழமை விழா நடைபெறவுள்ளது. ( )
4. கலைஞர்களுக்கான மதிப்பளிப்பும் இடம்பெறும். ( )
5. இவ்விழாவின் இறுதியில் மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். ( )

5 X 1 = 5 புள்ளிகள்

**குறிப்பு:**

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **எழுதுதல்** | | | | |
| 1 | 25 | | | |
| 2 | 06 | | | |
| 3 | 09 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 15 | | | |
| **வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்** | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |